ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# பத்தாம் பத்து

## பத்தாம் திருவாய்மொழி - முனியே
## ஆழ்வார் பரமபக்தியால் நைந்து திருமாலைத் தாம் சேர்ந்தமையை அருளிச் செய்து, திருவாய்மொழியைத் தலைக்கட்டுதல்

** முனியே! நான்முகனே! * முக்கண் அப்பா! * என் பொல்லாக்
கனி வாய்த் * தாமரைக் கண் கரு மாணிக்கமே! என் கள்வா! **
தனியேன் ஆருயிரே! * என் தலைமிசையாய் வந்திட்டு **
இனி நான் போகல் ஒட்டேன் * ஒன்றும் மாயம் செய்யேல் என்னையே 1

மாயம் செய்யேல் என்னை * உன் திருமார்வத்து மாலை நங்கை *
வாசம் செய் பூங்குழலாள் * திரு ஆணை நின் ஆணை கண்டாய் **
நேசம் செய்து உன்னோடு என்னை * உயிர் வேறின்றி ஒன்றாகவே *
கூசம் செய்யாது கொண்டாய் * என்னைக் கூவிக் கொள்ளாய் வந்து அந்தோ! 2

கூவிக் கொள்ளாய் வந்து அந்தோ! * என் பொல்லாக் கரு மாணிக்கமே! *
ஆவிக்கோர் பற்றுக் கொம்பு * நின் அலால் அறிகின்றிலேன் நான் **
மேவித் தொழும் பிரமன் சிவன் * இந்திரன் ஆதிக்கு எல்லாம் *
நாவிக் கமல முதற் கிழங்கே! * உம்பர் அந்ததுவே 3

உம்பர் அந்தண் பாழேயோ! * அதனுள் மிசை நீயேயோ! *
அம்பர நற்சோதி! * அதனுள் பிரமன் அரன் நீ **
உம்பரும் யாதவரும் படைத்த * முனிவன் அவன் நீ *
எம் பரம் சாதிக்கல் உற்று * என்னைப் போர விட்டிட்டாயே 4

போர விட்டிட்டு என்னை * நீ புறம் போக்கல் உற்றால் * பின்னை யான்
ஆரைக் கொண்டு எத்தை அந்தோ! * எனது என்பதென்? யான் என்பதென்? **
தீர இரும்பு உண்ட நீர் அது போல * என் ஆர் உயிரை
ஆரப் பருக * எனக்கு ஆரா அமுதானாயே 5

எனக்கு ஆரா அமுதாய் * எனது ஆவியை இன் உயிரை *
மனக்கு ஆராமை மன்னி உண்டிட்டாய் * இனி உண்டு ஒழியாய் **
புனக் காயா நிறத்த * புண்டரீகக் கண் செங்கனி வாய் *
உனக்கு ஏற்கும் கோல மலர்ப் பாவைக்கு அன்பா! * என் அன்பேயோ! 6

** கோல மலர்ப் பாவைக்கு அன்பாகிய * என் அன்பேயோ! *
நீல வரை இரண்டு பிறை கவ்வி * நிமிர்ந்தது ஒப்ப **
கோல வராகம் ஒன்றாய் * நிலம் கோட்டிடைக் கொண்ட எந்தாய்! *
நீலக் கடல் கடைந்தாய் * உன்னைப் பெற்று இனிப் போக்குவனோ? 7

பெற்று இனிப் போக்குவனோ? * உன்னை என் தனிப் பேர் உயிரை *
உற்ற இரு வினையாய் * உயிராய்ப் பயனாய் அவையாய் **
முற்ற இம்மூவுலகும் * பெருந்தூறாய்த் தூற்றில் புக்கு *
முற்றக் கரந்து ஒளித்தாய்! * என் முதல் தனி வித்தேயோ! 8

முதல் தனி வித்தேயோ! * முழு மூவுலகு ஆதிக்கு எல்லாம் *
முதல் தனி உன்னை உன்னை * எனை நாள் வந்து கூடுவன் நான்? **
முதல் தனி அங்கும் இங்கும் * முழு முற்றுறு வாழ் பாழாய் *
முதல் தனி சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த * முடிவு இலீயோ! 9

** சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த * முடிவில் பெரும் பாழேயோ! *
சூழ்ந்து அதனில் பெரிய * பர நன் மலர்ச் சோதீயோ! **
சூழ்ந்து அதனில் பெரிய * சுடர் ஞான இன்பமேயோ! *
சூழ்ந்து அதனில் பெரிய * என் அவா அறச் சூழ்ந்தாயே! 10

** அவா அறச் சூழ் * அரியை அயனை அரனை அலற்றி *
அவா அற்று வீடு பெற்ற * குருகூர்ச் சடகோபன் சொன்ன **
அவாவில் அந்தாதிகளால் * இவை ஆயிரமும் * முடிந்த
அவாவில் அந்தாதி இப்பத்து அறிந்தார் * பிறந்தார் உயர்ந்தே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---